තාක්ෂණ අමාත්‍යාංශය தொழில்நுட்ப அமைச்சு MINISTRY OF TECHNOLOGY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. – පු.ලි.දෙ/මෙ/මාධ්‍ය ඒකකය/ මාධ්‍ය නිවේදන හා දැන්වීම්

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. –

දිනය / திகதி / Date – 2021.08.13

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

**பொதுமக்களுக்கான மற்றுமொருஅறிவித்தல்**

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் சகல பொதுமக்களுக்கான சேவைகளும் மறுஅறிவித்தல்வரை இடைநிறுத்தப்படுகிறது**

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் சிலர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அவர்களுடன் தொடர்புபட்டதனால் உள்ளக பணிக்குழாமினரின் எண்ணிக்கையினை மட்டுப்படுத்தப்பட வேண்டிய காரணத்தினால் 2021.08.16ம் திகதி முதல் பிரதான காரியாலயம் மற்றும் சகல மாகாண காரியாலயங்கள் மறுஅறிவித்தல் வரை பொதுமக்களுக்காக திறக்கப்படாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. எவ்வாறாயினும், எதிர்வரும் நாட்களில் திணைக்களம் பொதுமக்களுக்கு திறக்கப்படாதபோதிலும் இதுவரை தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக திகதி மற்றும் நேரத்தினை ஒதுக்கிக்கொண்ட சகல விண்ணப்பதாரிகளுக்கான தேசிய அடையாள அட்டைகள் குறித்த தினத்தில் அல்லது அதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பதிவுத்தபால் மூலம் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு துரிதமாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்திற்கு விண்ணப்பத்தினை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை துரிதமாக தயாரித்து தபால் மூலம் விரைவாக அனுப்பவுதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. மேலும் பரீட்சை நடவடிக்கை, நேர்முகத்தேர்வு மற்றும் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் போன்ற அவசர மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக தேசிய அடையாள அட்டையினை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் தமது அவசர தேவையினை அலுவலக தினங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்பு கொண்டு திணைக்களத்திற்கு தெரிவிப்பதுடன் அக்குறித்த விண்ணப்பதாரர்களுக்கு துரிதமாக தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

04. இது தவிர தேசிய அடையாள அட்டைகள் சம்பந்தமாக பொதுமக்களுக்கு வழங்குகின்ற ஏனைய சேவைகள் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் மற்றும் மின்னஞ்சல் முகவரி info@drp.lk ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலக | தொலைபேசி இலக்கம் | - 0115226126/0115226100 |
| தென் மாகாண அலுவலக | தொலைபேசி இலக்கம் | - 0912228348 |
| வடமேல் மாகாண அலுவலக | தொலைபேசி இலக்கம் | - 0372224337 |
| கிழக்கு மாகாண அலுவலக | தொலைபேசி இலக்கம் | - 0652229449 |
| வடக்கு மாகாண அலுவலக | தொலைபேசி இலக்கம் | - 024222720 |

வியானி குணதிலக
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்